
# ஜி20 உச்சி மாநாடு இன்று தொடக்கம்

## தில்லி விழாக்கோலம்



தில்லி பிரகதி மைதானத்தில் வண்ண விளக்குகளில் ஜொலிக்கும் ஜி20 உச்சி மாநாட்டு அரங்கம்.

**புது தில்லி, செப். 8:** ஜி20 உச்சி மாநாடு தில்லியில் சனிக்கிழமை (செப். 9) தொடங்குவதையொட்டி, உலகத் தலைவர்களின் வருகையால் நாட்டின் தலைநகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென் கொரியா, மெக்ஸிகோ, ரஷியா, சவூதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜி20 கூட்டமைப்புக்கு கடந்த ஆண்டு டிசம்பரில் இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்றது.

அப்போதுமுதல் அக்கூட்டமைப்பு நாடுகளின் அமைச்சர்களுக்கான 200-க்கும் அதிகமான கூட்டங்களை நாட்டின் பல்வேறு நகரங்களில் மத்திய அரசு நடத்தியது. அக்கூட்டங்களில் பல்வேறு விவகாரங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒருங்கிணைந்த வளர்ச்சி, எண்ம புத்தாக்கம், சுகாதார கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து இந்தியா செயல்பட்டது.

இந்நிலையில், ஜி20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் 2 நாள் மாநாடு தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் சனிக்கிழமை தொடங்குகிறது. அதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் ஓலாஃப் ஷோல்ஸ் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்), உலக வங்கி, பொருளாதார ஒத்துழைப்பு-வளர்ச்சிக்கான கூட்டமைப்பு (ஓஇசிடி) உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளும் உச்சி மாநாட்டில் பங்கேற்கின்றனர். வங்கதேசம், எகிப்து, மாலத்தீவுகள், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஓமன், நைஜீரியா, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாக உச்சி மாநாட்டில் கலந்து கொள்கின்றன.

கரோனா தொற்று பரவலுக்குப் பிறகு மாறியுள்ள சர்வதேச சூழல், உக்ரைன்-ரஷியா போரால் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள தாக்கம், வளரும் நாடுகள் சந்தித்து வரும் கடன் பிரச்னை, பருவநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரித்தல், கிரிப்டோகரன்சியை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஜி20 உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



ஜி20 உச்சி மாநாட்டு கருப்பொருளில் உருவாக்கப்பட்டுள்ள பூமிப் பந்து.

**ஆப்பிரிக்கா இணைப்பு?:** ஜி20 கூட்டமைப்பில் 55 நாடுகளைக் கொண்ட ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் இந்த உச்சி மாநாட்டில் முடிவெடுக்கப்படவுள்ளது. ஆப்பிரிக்க ஒன்றியத்தை கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்வதற்கு இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அதனால், இந்த மாநாட்டில் ஆப்பிரிக்க ஒன்றியம் முழுநேர உறுப்பினராக மாற வாய்ப்புள்ளது.

**ஒருமித்த கருத்து ஏற்படுமா?:** ஜி20 உச்சி மாநாட்டில் சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. சீனாவின் சார்பில் பிரதமர் லி கியாங், ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

முக்கிய விவகாரங்களில் ஜி20 தலைவர்கள் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. முக்கியமாக, உக்ரைன்-ரஷியா போர் விவகாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ரஷியா மீது தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றன. அதே வேளையில், ரஷியாவுக்கு சீனா தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

அதனால், உக்ரைன் போர் தொடர்பாக நாடுகளுக்கு இடையே ஒருமித்த கருத்து ஏற்படுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக, உச்சி மாநாட்டின் கூட்டறிக்கை வெளியிடப்படுமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. நாடுகளுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளைக் களைந்து கூட்டறிக்கையை வெளிக்கொணர்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு இந்திய வீரர்: அமெரிக்காவுடன் பேச்சு தொடக்கம்

அடுத்த ஆண்டு சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு இந்திய விண்வெளி வீரரை அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தையை இந்தியாவும் அமெரிக்காவும் தொடங்கியுள்ளன.

ஜி20 உச்சி மாநாட்டையொட்டி இந்தியா வந்துள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தில்லியில் உள்ள பிரதமர் மோடியின் அரசு இல்லத்துக்கு வெள்ளிக்கிழமை சென்றார். அங்கு அதிபர் பைடனுக்கும், பிரதமர் மோடிக்கும் இடையிலான பேச்சுவார்த்தை 52 நிமிஷங்கள் நீடித்தன.

இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து இந்தியா–அமெரிக்கா வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

சந்திரயான்–3, ஆதித்யா எல்–1 திட்டங்கள் வெற்றிபெற்றதற்கு பிரதமர் மோடியிடம் அதிபர் பைடன் வாழ்த்து தெரிவித்தார்.

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா–அமெரிக்கா இடையிலான கூட்டுறவை ஆழமாக்க இருநாடுகளும் தீர்மானித்துள்ளன.

2024–இல் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு இந்திய வீரரை அனுப்புவதற்கான கூட்டு முயற்சியை மேற்கொள்ளும் வழிமுறைகள், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி குறித்த பேச்சுவார்த்தையை இஸ்ரோவும், நாசாவும் தொடங்கியுள்ளன.

இந்த ஆண்டு இறுதிக்குள் மனிதர்கள் விண்வெளிக்குச் செல்வதற்கான ஒத்துழைப்பு குறித்த உத்திசார்ந்த செயல்திட்டத்தை இறுதி செய்யும் நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

**விழாக்கோலத்தில் தில்லி:** உலகத் தலைவர்களின் வருகையால் தில்லி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. நகரத்தின் முக்கிய இடங்களில் ஜி20 இலச்சினையும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஜி20 மாநாடு நடைபெறவுள்ள பாரத் மண்டபத்தைச் சுற்றிலும், உலக நாடுகளின் தலைவர்கள் தங்கியுள்ள விடுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநாட்டையொட்டி தில்லி நகர மக்களுக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

# தமிழக காவல் துறை செயலிக்கு தேசிய குற்ற ஆவணக் காப்பக பதக்கம்

**சென்னை, செப். 8:** தமிழக காவல்துறையில் ரௌடிகளை கண்காணிக்க பயன்படுத்தப்படும் 'ட்ராக் கேடி' செயலிக்கு தேசிய குற்ற ஆவணக் காப்பக பதக்கம் கிடைத்துள்ளது.



ஐ.ஜி பிரேம் ஆனந்த் சின்ஹா

தமிழகத்தில் ரௌடிகளை கண்காணிக்கும் வகையில் காவல்துறையின் 'ட்ராக் கேடி' (Track KD) என்ற கைப்பேசி செயலி கடந்த ஆண்டு நவம்பர் 25-ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தச் செயலியின் மூலம் மாநிலம் முழுவதும் ரௌடிகள் கண்காணிக்கப்படுகிறார்கள். இதற்காக காவல்துறையின் ரௌடிகள் பட்டியல், சரித்திரப் பதிவேட்டு பட்டியலில் உள்ள தொடர் குற்றவாளிகள் உள்ளிட்ட சுமார் 30 ஆயிரம் பேரின் விவரங்கள்,புகைப்படங்கள், வழக்கு விவரங்கள், கைப்பேசி எண்கள் உள்ளிட்டவை செயலியின் சர்வரில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

காவல் துறையை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த செயலியை சென்னை பெருநகர காவல்துறையின் தெற்கு கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா தலைமையிலான குழுவினர் உருவாக்கினர்.

இதன் மூலம் காவல்துறையினரால் தேடப்படும் குற்றவாளிகள், நீதிமன்றத்தால் பிடிஆணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகள், தலைமறைவு குற்றவாளிகள் ஆகியோர் கண்டறியப்பட்டு, உடனே கைது செய்யப்படுகின்றனர்.

மேலும், பிணை பத்திரங்களின் காலாவதி தொடர்பான எச்சரிக்கைகள், நிலுவையில் உள்ள வழக்குகள், வழக்கு விசாரணை, குற்றத்தின் வகைகள் போன்றவற்றின் அடிப்படையில் இந்த செயலி வகைப்படுத்துகிறது. இதனால் காவல்துறையினருக்கு, ஒரு குற்றவாளி தொடர்பான தகவல்கள் விரைவாகவும், தெளிவாகவும், நுட்பமாகவும் ஒரு நொடிப் பொழுதில் கிடைக்கிறது.

**செயலிக்கு பதக்கம்:** தில்லியில் உள்ள தேசிய குற்ற ஆவண காப்பகம் சார்பில் அண்மையில் 'ஹக்கத்தான் மற்றும் சைபர் குற்ற சவால்கள்' என்ற தலைப்பில் புதிதாக உருவாகும் குற்றங்களுக்கு தீர்வுகளை கண்டுபிடிப்பது தொடர்பான போட்டி நடைபெற்றது.

நாடு முழுவதும் பல்வேறு மாநில காவல் துறையினர் பங்கேற்ற இந்தப் போட்டியில், கணினி மென்பொருள் பிரிவில், தமிழக காவல்துறையின் 'ட்ராக் கேடி' செயலி மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளது.

புது தில்லியில் செப். 14-ஆம் தேதி நடைபெறும் பரிசு வழங்கும் விழாவில், சென்னை காவல் துறையின் கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா அந்த பதக்கத்தைப் பெறுகிறார்.

# சாலை விபத்துகளில் சிக்கியவர்களை மீட்க உதவும் 'வீரா' வாகனம்

## முதல்வர் தொடங்கிவைத்தார்

**சென்னை, செப். 8:** சாலை விபத்துகளில் சிக்கியவர்களை மீட்க உதவும் 'வீரா' வாகனத்தின் சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தலைமைச் செயலக வளாகத்தில் இதற்கான நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சாலை விபத்துகளில் சேதமடைந்த வாகனங்களில் சிக்கிக் கொள்பவர்களின் உயிரைக் காப்பதற்கு, தனித்துவமான-முன்னோடியான முயற்சியாக மீட்பு வாகனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி இந்தியாவிலேயே முதல் முறையாக திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் இயக்கத்தை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



சாலை விபத்தில் சிக்கியவர்களை மீட்டெடுக்கும் பணிக்கான 'வீரா' எனும் அவசர கால மீட்பு வாகனத்தை சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறை பயன்பாட்டுக்காக தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை கொடியசைத்து தொடங்கிவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால், காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்டோர்.

சாலை விபத்தில் சேதமடைந்த வாகனங்களில் சிக்கிக் கொள்ளும் நபர்களை மீட்க இந்த வாகனம் பெரிதும் உதவும். மீட்புக்கான அனைத்து உபகரணங்களும், நன்கு பயிற்சி பெற்ற காவல் குழுவினரும் வாகனத்தில் இடம்பெற்றிருப்பர்.

**வீரா வாகனம்:** விபத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கு உதவி செய்யும் வாகனத்துக்கு 'வீரா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதாவது ஆங்கிலத்தில் Vehicle for Extrication in Emergency Rescue and Accidents என்பதன் சுருக்கமாக VEERA எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான முன்னெடுப்பை, சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், ஹூண்டாய் குளோவிஸ் மற்றும் இசுசு மோட்டார்ஸ் நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்டுள்ளன.

வாகனத்தை இயக்கி வைக்கும் நிகழ்வில், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY